[2012 ஏப்ரல் 25

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட அரூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டி அரசு கலைக் கல்லூரிகளுக்கு ஓராண்டுகாலம் நிறைவு பெறுகிறது. இந்தக் கல்லூரிகளுக்கு மாணவியர்கள் வெகு தூரத்திலிருந்து வந்து செல்வதால், விடுதி வசதியில்லாமல் தவிக்கிற ஒரு நிலைமை ஏற்படுகின்றது. இந்தக் கல்வியாண்டிலாவது அரூர் அரசு கலைக் கல்லூரிக்கும், பாப்பிரெட்டிபட்டி அரசு கலைக் கல்லூரிக்கும் மாணவியர் விடுதி கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு ஒரு விடுதி தொடங்கப்பட வேண்டுமென்றால், போதிய மாணவர்களின் எண்ணிக்கை, கட்டட வசதி, வாடகைக் கட்டடம் இருக்க வேண்டும். இவற்றின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்த நிதியாண்டிலே பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**166—**

## தரம் உயர்த்துதல்

***5454—திரு. கடம்பூர் ராஜு:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கடம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

2012 ஏப்ரல் 25]

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுகாதார மாவட்டம், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் கழுகுமலை ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கை வசதிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. எனவே, அதே ஒன்றியத்தைச் சேர்ந்த கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் வாய்ப்புகள் இல்லையென மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொற்காலம், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் வரும்போதெல்லாம் சுகாதாரத் துறைக்குப் பொற்காலம் என்பதை நாடு நன்கு அறியும். அந்த வகையிலே, கேட்டவுடனே வரம் தரும் அன்னை ஆதிபராசக்தியைப்போல, எங்கள் அம்மா அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரிலே சுகாதாரத் துறை குறித்து பேசும் வாய்ப்பையும் அளித்து, அதன்மூலம் கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்கு இரண்டு கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்து CT Scan வசதியைச் செய்து கொடுத்தமைக்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்களைச் செலுத்தி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

கடம்பூர் ஒரு பேரூராட்சிப் பகுதி. அதன் சுற்றுப்புறங்களில் ஏராளமான கிராமங்கள் உள்ளன. தினமும் சுமார் 300–க்கும் மேற்பட்டவர்கள் புற நோயாளிகளாக சிகிச்சைப் பெறுகின்றார்கள். மேலும், கடம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது Block P.H.C.–ஆக உள்ளது. மேல் சிகிச்சைக்காக இப்பகுதி மக்கள் கழுகுமலை மற்றும் கோவில்பட்டிக்கு 35 கிலோ மீட்டர் தொலைவு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களுடைய அரசின்மூலம் நிச்சயமாகத் தரம் உயர்த்தி, கடம்பூர்

அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட ஆவன செய்யவேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முதன்முதலாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் 2001 ஆம் ஆண்டில், வட்டாரத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி, 30 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுகாதார மாவட்டம், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்திலே, கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலையம், கழுகுமலை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், வெள்ளாளன்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையம் போன்றவை இருக்கின்றன. கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள் கட்டமைப்பு வசதியை மேம்படுத்த, பிரசவ அறை விரிவாக்கம், பிரசவ பின் கவனிப்பு அறை மற்றும் தடுப்பூசிக் கூடம் ஆகியவற்றைக் கட்ட 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கழுகுமலை ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருவதால் இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அதில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கைக்குச் சமமாக மயிலாடுதுறையிலுள்ள அரசு மருத்துவமனையில் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆனால், தாலுகா மருத்துவமனை என்ற ஒரே

2012 *ஏப்ரல்* 25]

*காரணத்திற்காக அரசு மருத்துவமனைக்கு ஈடாக எந்தச் செயல் திட்டமும் அதில் இல்லை. ஆகவே, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்ட மருத்துவமனையிலே எத்தனை படுக்கை வசதி இருக்க வேண்டும், என்னென்ன வசதிகள் இருக்க வேண்டுமென்ற ஒரு வரன்முறை இருக்கின்றது. அதேபோல், ஒரு தாலுகா மருத்துவமனை என்றால் எத்தனை படுக்கை வசதி, என்னென்ன வசதிகள் இருக்க வேண்டுமென்ற ஒரு வரன்முறை இருக்கின்றது. அதைக் கொண்டே அந்த வசதிகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள், கேள்வியைச் சற்று விரைவாகக் கேளுங்கள்.*

*பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**திரு. ஆர். சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி கொட்டாம்பட்டியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை நவீனப்படுத்தி, 30 படுக்கை வசதிகள் கொண்டதாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Very good. *இந்த மாதிரி கேள்வி கேட்டால், எனக்கும் வசதியாக இருக்கும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டாரத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கை வசதியுடன்*

மேம்படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள வட்டாரத்திலே ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லையெனில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுகுறித்து கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் இருக்கின்ற 12 கிராமங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் சுகாதார வசதிக்காக அங்கு வர வேண்டும். பிரசவத்திற்காக பொள்ளாச்சி செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டதைப்போல ஒரு வட்டாரத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும்தான் தரம் உயர்த்த இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள வட்டாரத்திலே வேறு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லையென்றால், கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுகுறித்து கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

2012 ஏப்ரல் 25]

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட மதுராந்தகம் ஒன்றியத்தில் பிரவின்எண்டத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதனை 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்ன பதில்தான் இதற்கும். அந்த வட்டாரத்திலே எந்த ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் இல்லையென்றால், கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுகுறித்து கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, ஜருகில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும், தருமபுரி ஒன்றியத்தில் நூலஹள்ளி கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்தித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்றால், அங்கே 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். அதன் பக்கத்தில் 8 கிலோ மீட்டர் தொலைவிற்கு எந்த மருத்துவமனையும் இருக்கக்கூடாது. அப்படி இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

**திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உளுந்தூர்பேட்டை தொகுதியிலே எலவனாசூர் கோட்டையில் கிட்டத்தட்ட 50 கிராமங்கள் உள்ளடக்கிய பகுதிக்கான ஆரம்ப சுகாதார நிலையம் இருந்து வருகிறது. அதனை 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்ன பதில்தான் இதற்கும் பொருந்தும். அந்த வட்டாரத்திலே எந்த ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் இல்லையென்றால், கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுகுறித்துக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதே பதில்தான் இதற்கும் பொருந்தும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

**திருமதி ச. முத்துசெல்வி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட திருவேங்கடம் பேரூராட்சியில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. இங்குள்ள மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் 15 கிலோ மீட்டர் தொலைவுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, திருவேங்கடம் பேரூராட்சியில் மகப்பேறு வசதியுடன்கூடிய ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 25]

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையானது, அந்தத் தொகுதி சட்டமன்றத் தேர்தலின்போதே சொல்லப்பட்டது. ஆகவே, இது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**167—**

**மேல்நிலைப் பள்ளி**

***4241—திரு. பி.வி. கதிரவன்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பல சிறந்த கல்வித் திட்டங்களையும் ஊக்கத் தொகைகளையும் வழங்கி, அனைவரும் கல்வி கற்க வேண்டும், அவர்களுக்கு எந்தவிதத் தடையும் இருக்கக்கூடாது, குறிப்பாக, பெண்கள் கல்விக்காகப் பெரிதும் ஊக்கத்தை அளித்து, பல நலத் திட்டங்களைத் தீட்டி உதவி புரிந்து வருகிறார்கள். அந்த வகையில் உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில், அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி ஒன்று தற்போது செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை 1,867 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அதில் 1,072 மாணவர்களும், 795 மாணவியர்களும் அடங்குவர்.*